©
GOVERNMENT OF TAMIL NADU
2024

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No.197/2009.
[Price: Rs. 14.40 Paise.

தமிழ்நாடு அரசிதழ்

சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 213A] சென்னை, சனிக்கிழமை, ஜூன் 29, 2024
ஆனி 15, குரோதி, திருவள்ளுவர் ஆண்டு-2055

பகுதி IV—பிரிவு 1

தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்

பக்கங்கள்

சட்டமுன்வடிவுகள்:

எண். 27/2024—சென்னை மாநகரக் காவல் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் .. 2–4

எண். 28/2024—தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டம் 5–6

எண். 29/2024—தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம் 7–14

எண். 30/2024—தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டம் 15–16

எண். 31/2024—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 2) சட்டம் 17–24

எண். 32/2024—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 3) சட்டம் 25–28

எண். 33/2024—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 4) சட்டம் 29–32

எண். 34/2024—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 5) சட்டம் 33–35

Verified RedEstate™

DTP—Ex-IV-1 (213A)

2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2024

தமிழ்நாடு மாநிலத்தில் குறித்த சில மாநகரக் காவல் சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

பகுதி-I.

முன்னுரை

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பகுதி-II.

1987ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச்) சட்டத்திற்கான திருத்தம்.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1987ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச்) சட்டத்தின் இரண்டாம் பிரிவின் (2) மற்றும் (3) ஆம் கூறுகளுக்காக பின்வரும் கூறுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– தமிழ்நாடு சட்டம் 32/1987.

"(2) "கோயம்புத்தூர் மாநகரம்" என்பது அரசால் அறிவிக்கையின் மூலம் கோயம்புத்தூர் மாநகரம் என அறிவிக்கப்படும் பகுதி என்று பொருள்படும்;

(3) "மதுரை மாநகரம்" என்பது அரசால் அறிவிக்கையின் மூலம் மதுரை மாநகரம் என அறிவிக்கப்படும் பகுதி என்று பொருள்படும்;".

பகுதி-III.

1997ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச்) சட்டத்திற்கான திருத்தம்.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. 1997ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச்) சட்டத்தின் இரண்டாம் பிரிவின் (2) மற்றும் (3) ஆம் கூறுகளுக்காக பின்வரும் கூறுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:– தமிழ்நாடு சட்டம் 51/1997.

"(2) "திருச்சிராப்பள்ளி மாநகரம்" என்பது அரசால் அறிவிக்கையின் மூலம் திருச்சிராப்பள்ளி மாநகரம் என அறிவிக்கப்படும் பகுதி என்று பொருள்படும்;

(3) "திருநெல்வேலி மாநகரம்" என்பது அரசால் அறிவிக்கையின் மூலம் திருநெல்வேலி மாநகரம் என அறிவிக்கப்படும் பகுதி என்று பொருள்படும்;".

பகுதி-IV.

2012ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்புச்) சட்டத்திற்கான திருத்தம்.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. 2012ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகரத்திற்கு செயற்பாடு நீட்டிப்புச்) சட்டத்தின் இரண்டாம் பிரிவின் (2) மற்றும் (3) ஆம் கூறுகளுக்காக பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– தமிழ்நாடு சட்டம் 35/2012.

"(2) "திருப்பூர் மாநகரம்" என்பது அரசால் அறிவிக்கையின் மூலம் திருப்பூர் மாநகரம் என அறிவிக்கப்படும் பகுதி என்று பொருள்படும்;".

Verified RealEstate™

நோக்கக் காரண விளக்கவுரை

21-04-2013 அன்றைய காவல்துறையின் மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருப்பூர் மாவட்டத்தின் மங்கலம் காவல் நிலையம், திருப்பூர் மாநகரக் காவல்துறை ஆணையரகத்துடன் இணைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

2. மேலும், 1971–ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1971), 1981–ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/1981), 1994–ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1994), 1994–ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 28/1994) மற்றும் 2008–ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி சட்டம் (தமிழ்நாடு சட்டம் 7/2008) ஆகியவை 1998–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர ஊராட்சி அமைப்புகள் சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 9/1999) நீக்கறவு செய்யப்பட்டதன் விளைவாக 1987–ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல்துறை (மதுரை மாநகரம் மற்றும் கோயம்புத்தூர் மாநகரத்திற்கு நீட்டிக்கப்படுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 32/1987), 1997–ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி மாநகரங்களுக்கு நீட்டிக்கப்படுதல் சட்டம், (தமிழ்நாடு சட்டம் 51/1997) மற்றும் 2012–ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருப்பூர் மாநகராட்சிக்கு நீட்டிக்கப்படுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/2012) ஆகியவற்றில் 'கோயம்புத்தூர் மாநகரம்', 'மதுரை மாநகரம்', 'திருச்சிராப்பள்ளி மாநகரம்', 'திருநெல்வேலி மாநகரம்' மற்றும் 'திருப்பூர் மாநகரம்' ஆகிய சொற்றொடர்களின் பொருள் வரையறைகள் தக்கவாறு திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது.

3. எனவே, அரசானது, கூறப்பட்ட நோக்கத்திற்காக தமிழ்நாடு சட்டம் 32/1987, தமிழ்நாடு சட்டம் 51/1997 மற்றும் தமிழ்நாடு சட்டம் 35/2012 ஆகியவற்றை தக்கவாறு திருத்தம் செய்ய முடிவு செய்துள்ளது.

4. இந்த சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

மு.க. ஸ்டாலின்,
முதலமைச்சர்.

Verified RedEsoft

சட்டமியற்றும் அதிகாரம் ஒப்படைவு பற்றிய குறிப்பு

இந்த சட்டமுன்வடிவின் 2, 3 மற்றும் 4–ஆம் கூறுகள் அவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அறிவிக்கை பிறப்பிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

மு.க. ஸ்டாலின்,
முதலமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 ஜூன் 29.

கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.

Verified RealEstate™

2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2024

1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

3 (14)ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 58/1961.

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (14) ஆம் கூறில்,–

(1) (i) ஆம் உட்கூறில், "உரிமை வயதடையாத மகன்கள் மற்றும் திருமணமாகாத மகள்கள்" எனும் சொற்றொடருக்காக, "உரிமை வயதடையாத குழந்தைகள் "எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (ii) ஆம் உட்கூறில், "உரிமை வயதடையாத பேரன்கள் மற்றும் திருமணமாகாத பேத்திகள்" எனும் சொற்றொடருக்காக, "உரிமை வயதடையாத பேரக் குழந்தைகள் "எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

Verified © RealEstate ™

நோக்கக் காரண விளக்கவுரை

2023–2024 ஆண்டிற்கான நிதிநிலைக் கூட்டத்தொடரின் போது, சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும், திருமணமாகாத ஆண்களுக்கு இணையாக திருமணமாகாத மகளிருக்கும் சம உரிமைகளை வழங்கவும் 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 58/1961) "குடும்பம்" என்பதற்கான பொருள்வரையறையில் இருந்து "திருமணமாகாத மகள்கள்" மற்றும் "திருமணமாகாத பேத்திகள்" எனும் சொற்றொடர்கள் விட்டுவிடப்பட்டு, கூறப்பட்ட சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட உச்சவரம்பு பரப்பளவு வரையிலான நிலங்களை உரிமை வயதடைந்த திருமணமாகாத மகளிர் தனியாக உடைமையில் கொண்டிருப்பதை இயல்விப்பதற்காக, "உரிமை வயதடையாத குழந்தைகள்" மற்றும் "உரிமை வயதடையாத பேரக்குழந்தைகள்" எனும் சொற்றொடர்கள் மாற்றாக அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

2. அரசு, மேற்சொன்ன அறிவிப்பிற்கு செயல்விளைவு கொடுப்பதற்காக கூறப்பட்ட சட்டத்தை திருத்தம் செய்ய முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்,
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மைத் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 ஜூன் 29.

கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.

Verified RedEstate

2024 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2024

1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) (2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

3 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் X/1937.

2. (இதன்பின்பு முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (12) ஆம் கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(12)" "இடம்" என்பது வீடு, கொட்டகை சுற்றடைப்பு, கட்டடம், கடை, கூடாரம், சாவடி, ஊர்தி, வண்டி மற்றும் கலம் ஆகியவற்றையும் உள்ளடக்கும்;".

4 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவில்,–

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) (k) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(k) ஓர் இடத்தின் உரிமையாளராக, அல்லது பொறுப்பாளராக, அல்லது நிர்வாகத்தில், அல்லது கட்டுப்பாட்டில், அல்லது உடைமையில் இருப்பது, என்பது, அந்த நோக்கத்திற்காக உரிமம் எதுவும் பெறாமல் அத்தகைய இடத்தில் மதுபானம் அருந்துதல் உள்ளடங்கலாக அத்தகைய இடத்தின் மீது (a) முதல் (jj) வரையிலான உட்கூறுகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்கள் எவற்றையும் செய்ய அனுமதிக்காது" என்னும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) கூறுக்கு பின்பு, "தண்டிக்கப்படுதல் வேண்டும்" என்னும் சொற்றொடருக்காக மற்றும் அதன்கீழ் வரும் (a) முதல் (c) கூறுகளுக்காக பின்வரும் சொற்றொடர் மற்றும் கூறுகளானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அவையாவன:–

"பின்வரும் குற்றங்களின் நேர்வில், தண்டிக்கப்படுதல் வேண்டும்–

"(A) (aaa), (b), (f), (h) மற்றும் (i) ஆகிய கூறுகளின் கீழ் வருகின்ற குற்றச்செயல்களைப் பொருத்த வரையில் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத, ஏழு ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு கால அளவிற்கு கடுங்காவல் தண்டனையுடன், இரண்டு லட்சம் ரூபாய்க்கும் குறையாத ஆனால் மூன்று லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகையும் விதித்து;

(B) (aa) மற்றும் (k) கூறுகளின் கீழ் வருகின்ற குற்றச்செயல்களைப் பொருத்த வரையில் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத, ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு கால அளவிற்கு கடுங்காவல் தண்டனையுடன், ஒரு லட்சம் ரூபாய்க்கும் குறையாத ஆனால் இரண்டு லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகையும் விதித்து;

Verified by PadiEstate ™

(C) பிற கூறுகளின் கீழ் வருகின்ற குற்றச்செயல்களைப் பொருத்த வரையில் ஓர் ஆண்டிற்கும் குறையாத, மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு கால அளவிற்கு கடுங்காவல் தண்டனையுடன், ஐம்பதாயிரத்திற்கும் குறையாத ஆனால், ஒரு லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகையும் விதித்து;

வரம்புரையாக, மேற்கண்ட கூறு (A), கூறு (B) மற்றும் கூறு (C) ஆகியவற்றில் என்ன அடக்கியிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின் மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளின்படி தயாரிக்கப்பட்டு விற்கப்படும் (j) கூறின் (i) உட்கூறின் கீழ் மாநில அரசால் குறிப்பிடப்பட்ட மதுபானத்தின் போக்குவரத்து, வைத்திருத்தல் மற்றும் அருந்துதல் தொடர்பான குற்றங்களுக்கு ஓராண்டு வரை நீட்டிக்கலாகும் சிறை தண்டனை அல்லது இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு குறையாத தண்ட தொகையுடன் அல்லது இவ்விரண்டும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்:''

(c) தற்போதுள்ள வகைமுறையில், ''வரம்புரையாக'' என்ற சொற்றொடருக்காக, ''மேலும் வரம்புரையாக'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்:

(2) (1–A) உட்பிரிவின் (i) மற்றும் (ii) ஆம் கூறுகளுக்காக, பின்வரும் கூறுகளானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

(i) அதனை அருந்துவதால் மரணம் ஏற்பட்டிருந்தால், ஆயுள் காலம் வரை கடுங்காவல் சிறை மற்றும் பத்து லட்சம் ரூபாய்க்கும் குறையாத தண்டத்தொகை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ii) பிற நேர்வு எதிலும் ஐந்து ஆண்டுகளுக்கு குறையாத, பத்து ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு கால அளவிற்கு கடுங்காவல் தண்டனையுடன், ஐந்து லட்சம் ரூபாய்க்கும் குறையாத ஆனால் பத்து லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகையும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

5–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 5–ஆம் பிரிவில், ''மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு கால அளவிற்கு கடுங்காவல் சிறைத்தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகையும்'' என்ற சொற்றொடருக்காக, மூன்று ஆண்டுகளுக்கு குறையாத, ஏழு ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு கால அளவிற்கு கடுங்காவல் தண்டனையுடன், இரண்டு லட்சம் ரூபாய்க்கும் குறையாத ஆனால் மூன்று லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகையும் என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

5–A எனும் பிரிவை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''5–A. மது அருந்துவதற்கு பயன்படுத்தப்படும் உரிமம் பெறாத இடங்களை மூடி முத்திரையிடுதல்.–, (1) இடம் எதனின் உரிமையாளராகவோ, அல்லது பொறுப்பாளராகவோ, மேலாண்மையாளராகவோ, அல்லது கட்டுப்பாட்டில் கொண்டுள்ளவராகவோ அல்லது உடைமையில் உள்ளவராகவோ இருக்கும் நபரெவரும், இந்தச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்படி உருவாக்கப்பட்ட விதிகளின்படி உரிமம் பெறாமல், அவ்விடத்தில் மது அருந்துதலை அனுமதித்தல் கூடாது.

(2) இந்தச்சட்டம் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் மதுஅருந்துவதற்குப் பயன்படுத்த உரிமம் பெறாத இடம் எதுவும் மது அருந்துவதற்கு பயன்படுத்த அனுமதிக்கப்பட்டால், அந்த இடம் மதுவிலக்கு அலுவலரால் அல்லது தொடர்புடைய மாவட்ட ஆட்சியரால் அதிகாரமளிக்கப்படலாகும், வட்டாட்சியர் படி நிலைக்கு குறையாத அலுவலர் ஒருவரால் மூடி முத்திரையிடப்படுதல் வேண்டும். அத்தகைய இடத்தின் உரிமையாளர், அல்லது பொறுப்பாளர், அல்லது மேலாண்மை கொண்டவர், அல்லது கட்டுப்பாட்டில் கொண்டுள்ளவர் அல்லது உடைமையில் இருப்பவர் இந்த உட்பிரிவின் கீழ் அவ்வாறு மூடி முத்திரை வைக்கப்பட்ட இடத்திற்கு பாதுகாப்பை வழங்க வேண்டும்.

Verified Read State ™

(3) (2) உட்பிரிவின் கீழ் ஓர் இடத்தினை மூடி முத்திரை வைத்த பின்பு, அந்த இடத்தின் உரிமையாளருக்கு, பொறுப்பாளருக்கு, அல்லது, அந்த இடத்தை மேலாண்மை, அல்லது கட்டுப்பாட்டில் கொண்டுள்ள அல்லது உடைமையில் வைத்திருப்பவருக்கு, அத்தகைய இடத்திற்கு, நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள் எழுத்து பூர்வமாக அறிவிப்பு கொடுக்கப்பட்டு, அந்த இடம் எதனடிப்படையில் மூடி முத்திரை வைக்கப்பட்டது என்பதை அவருக்குத் தெரிவிக்க வேண்டும். அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய காலத்திற்குள்ளாக, அந்த இடத்தை மூடி முத்திரையிட்ட அலுவலரிடம் எழுத்துப்பூர்வமாக விளக்கம் அளிக்க அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய விளக்கம் தொடர்புடைய அலுவலரால் பரிசீலிக்கப்பட்டு ஏழு நாட்களுக்குள் தகுதியின் அடிப்படையில் ஆணை பிறப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) (2) ஆம் உட்பிரிவின்கீழ் மூடி முத்திரையிடப்பட்ட இடம், ஆணையிடப்பட்டபடி, மூன்று மாதங்களுக்கு மிகாமல் தொடர்ந்து மூடி வைக்கப்படலாம்.

(5) (3) ஆம் உட்பிரிவு அல்லது (6) ஆம் உட்பிரிவின்படி மூடி மூத்திரையிடப்பட்ட ஆணை திரும்பப் பெறப்பட்டாலன்றி முத்திரையை எவரும் நீக்கக்கூடாது.

(6) (3) ஆம் பிரிவின்கீழ், ஆணை ஒன்றினால் இடருற்ற நபரெவரும், அத்தகைய ஆணை கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், தொடர்புடைய மாவட்ட ஆட்சியரிடம். மேல்முறையீடு ஒன்றினை கொய்யலாம். மேல்முறையிட்டாளரிடம் விளக்கத்தை வழங்குவதற்கான வாய்ப்பை வழங்கிய பிறகு, முப்பது நாட்கள் கால அளவிற்குள் பொறுத்தமெனக் கருதலாகும் அத்தகைய மேல்முறையிட்டின் மீது தகுந்த ஆணையை பிறப்பிப்பார்''.

6–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 6–ஆம் பிரிவில், ''ஆறுமாதங்கள் வரை சிறை தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய் வரை தண்டத்தொகை அல்லது அவ்விரண்டும் எனும் சொற்றொடருக்காக, இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத, ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு கால அளவிற்கு கடுங்காவல் தண்டனையுடன், ஒரு லட்சம் ரூபாய்க்கும் குறையாத ஆனால் இரண்டு லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகையும் விதித்தல் வேண்டும்.

7–ஆம் பிரிவின் மாற்றீடு.

7. முதன்மைச் சட்டத்தின் 7ஆம் பிரிவிற்காக பின்வரும் பிரிவுகளானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

''7. கூட்டுச் சதிச்செயலுக்கான தண்டனை.– இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள்–

(i) 4 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் அதிலுள்ள முதல் வரம்புரையைத் தவிர, (A) கூறு (B) கூறு மற்றும் (C) கூறு, 4ஆம் பிரிவின் (1–A) ஆம் உட்பிரிவின் அல்லது 5ஆம் பிரிவின் படி தண்டிக்கக் கூடிய குற்றம் எதையும் செய்ய அல்லது செய்விக்க ; அல்லது

(ii) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை தவிர்க்க அல்லது பயனிழக்கச் செய்ய, உடன்படும் போது, அந்த உடன்பாட்டை தவிர அதற்கு இணங்கியபடி அதன் தரப்பினர் எவராலும் செயல் எதுவும் செய்யப்படவில்லை என்றாலும் கூட, அத்தயை ஒவ்வொரு நபரும் (i) ஆம் கூறின் படியான குற்றம் எதனின் நேர்விலும் அத்தகைய குற்றத்தை செய்ததற்கான தண்டனையுடன் தண்டிக்கப்படுதல் மற்றும் (ii) ஆம் கூறின் படியான குற்றம் எதனின் நேர்விலும் ஓர் ஆண்டுக்குக் குறையாத ஆனால் மூன்றாண்டுகள் வரை நீட்டிக்கலாகும் ஒரு கால அளவிற்கு மற்றும் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறையாத ஆனால் ஒரு லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்."

Verified by TNGovt Estate ™

11 ஆம் பிரிவிற்கான திருத்தம்

8. முதன்மைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில், " ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கலாகும் சிறைதண்டனை அல்லது ஐநூறு ரூபாய் வரை நீட்டிக்கலாகும் தண்டத்தொகையுடன் அல்லது இவ்விரண்டுடனும்" என்னும் சொற்றொடருக்காக " மூன்றாண்டுகள் வரை நீட்டிக்கலாகும், ஓர் ஆண்டுக்குக் குறையாத சிறைதண்டனை அல்லது ஒரு லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கலாகும் ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் குறையாத தண்டத்தொகையுடன்" என்னும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

13–A பிரிவிற்கான திருத்தம்.

9.முதன்மைச் சட்டத்தன் 13–A பிரிவின் (1) ஆம் கூறில், "சாதனம்" எனும் சொற்றொடருக்காக, "சாதனங்கள் " மற்றும் பிற அசையும் சொத்துக்கள்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

14–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 14–ஆம் பிரிவில்,—(1). (2) ஆம் உட்பிரிவின் வரம்புரையில், "வண்டி அல்லது பிற வாகனம்" எனும் சொற்றொடருக்காக, அவை காணப்படும் இரண்டு இடங்களில், "இந்தச் சட்டத்தின் படியான ஏதேனும் குற்றங்களைச் செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட வண்டி, வாகனம் அல்லது பிற அசையும் சொத்து" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்:

(2) (4) ஆம் உட்பிரிவில், "வண்டி அல்லது பிற வாகனம்" எனும் சொற்றொடருக்காக, அவை காணப்படும் ஐந்து இடங்களில், "வண்டி, வாகனம் அல்லது பிற அசையும் சொத்து" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (5) ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

"(6) இந்தப் பிரிவின் கீழ் சொத்து எதுவும் பறிமுதல் செய்யப்பட்டிருக்குமிடத்தில், அத்தகைய சொத்தானது, அனைத்து வில்லங்கங்கள் எதுவுமின்றி அரசிடம் உற்றமைத்தல் வேண்டும்.".

14–A பிரிவிற்கான திருத்தம்.

11. முதன்மைச் சட்டத்தின் 14–A பிரிவில், ஓரத்தலைப்பு உள்ளடங்கலாக, "வண்டி அல்லது பிற வாகனம்" எனும் சொற்றொடருக்காக, "வண்டி, வாகனம் அல்லது பிற அசையும் சொத்து" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

24–D பிரிவிற்கான திருத்தம்.

12. முதன்மைச் சட்டத்தின் 24–D பிரிவில், (1) ஆம் உட்பிரிவின் (aaa), (b), (f) மற்றும் (h) கூறுகளின் படியான குற்றம் மற்றும் 4 ஆம் பிரிவின் (1–A) உட்பிரிவின் படி தண்டிக்கப்படக் கூடிய குற்றம் மற்றும் 6 ஆம் பிரிவு மற்றும் 52–E பிரிவின் படியான குற்றங்கள், அத்தகைய குற்றத்தினை இணக்கமாகத் தீர்த்துக்கொள்வதன் மூலம், பத்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத, ஆனால் ஓராயிரம் ரூபாய்க்கு குறையாத பணத்தொகை" எனும் சொற்றொடருக்காக, பின்வரும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

" 4–ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அதனின் கீழுள்ள முதல் வரம்புரை தவிர 4–ஆம் பிரிவின் (1–A) உட்பிரிவு, 5, 6,7 ஆம் பிரிவுகள் மற்றும் 52–E பிரிவைத் தவிர (A) கூறு, (B) கூறு மற்றும் (C) கூறின்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றங்கள், அத்தகைய குற்றங்களை இணக்கமாக தீர்த்துக் கொள்வதற்காக இருபத்தைந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத, ஆனால் பத்தாயிரம் ரூயாய்க்கு குறையாத தொகை செலுத்தி அத்தகைய குற்றத்தை இணக்கமாகத் தீர்த்துக் கொள்ளலாம்."

Verified Book Copy

52–AA எனும் பிரிவை உட்புகுத்துதல்

13. முதன்மைச் சட்டத்தின் 52–A பிரிவிற்குப்பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"52–AA வாடிக்கை குற்றவாளியிடமிருந்து நன்னடத்தையை தொடர்வதற்கான பிணைமொழி.—(1) ஒரு நிர்வாகத் துறை நடுவர், தனது வட்டார எல்லைவரம்பிற்குள், நபர் ஒருவர், 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (A) கூறு, (B) கூறு மற்றும் (C) கூறு, 4 ஆம் பிரிவின் (1–A) உட்பிரிவு, 5 ஆம் பிரிவு மற்றும் 7 ஆம் பிரிவின் கீழ் தண்டனைத் தீர்ப்பு பெற்றிருக்கிறார் மற்றும், அவர், அமைதியை சீர்குலைக்குப்பதில் ஈடுபடுவதைப் பற்றிய மேற்சொன்ன பிரிவுகளின்படி தண்டிக்கப்படத்தக்க குற்றங்களை வாடிக்கையாக செய்கிறார் அல்லது செய்ய முயற்சிக்கிறார், அல்லது அச்செயலுக்கு உடந்தையாய் இருக்கிறார் என்று தகவல் பெறும் போது, நிர்வாகத் துறை நடுவரானவர், 1973–ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணை முறை தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் 2/1974) 111 முதல் 116 வரையிலான பிரிவுகளில் வகைசெய்யப்பட்டுள்ள முறையில், நிர்வாகத் துறை நடுவர் தக்கதெனக் கருதுகிறவாறு, மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத அத்தகைய காலஅளவிற்கு நன்னடத்தைக்கான பிணையுடன் பிணைமுறி செய்துகொடுக்க, தான் ஏன் ஆணை வழங்கக்கூடாது என்பதற்கு அத்தகைய நபரை விளக்கம் கோரலாம்.

(2) அத்தகைய விசாரணையின் பேரில் நன்னடத்தையை தொடர்ந்திருப்பதற்காக அல்லது அது நிரூபிக்கப்பட்டிருப்பின், எந்த நபரிடம் அத்தகைய விசாரணை செய்யப்பட்டதோ, அந்த நபர், பிணையுடன் பிணைமுறி செய்து கொடுக்க வேண்டியதாகும் என நிர்வாகத் துறை நடுவர், அதற்கிணங்க ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும்:

வரம்புரையாக,—

(a) நபர் எவரும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட விளக்கம் கோரும் அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்டதைவிட, வேறுபட்ட தன்மையிலோ, அதிக தொகைக்கோ, அதிக கால அளவிற்கோ பிணையம் கொடுக்கும்படி ஆணை பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(b) பிணைமுறி ஒவ்வொன்றின் தொகையானது ஏற்றவாறு நிர்ணயிக்கப்படுதல் வேண்டும் மற்றும் மிகையானதாக இருத்தல் கூடாது.

(c) எந்த நபர் பொறுத்து விசாரணை செய்யப்பட்டதோ அவர் உரிமைவயதடையாதவராக இருக்குமிடத்து, பிணைமுறியானது அவரது பிணையதாரர்களால் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.

(3) பிணைமுறியானது, இந்தச் சட்டத்தின் II ஆம் இணைப்புப் பட்டியலில் வழங்கப்பட்டுள்ள வடிவத்தில் இருத்தல் வேண்டும் மற்றும் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணை முறை தொகுப்புச் சட்டத்தின் வகை முறைகள், எந்த அளவிற்கு அவை பொருந்துமோ, அந்த அளவிற்கு அந்த தொகுப்புச் சட்டத்தின் 117 ஆம் பிரிவின் கீழ் செய்து கொடுக்க ஆணையிடப்பட்ட நன்னடத்தையை தொடர்ந்திருத்தலுக்கான பிணைமுறியான அத்தகைய பிணைமுறியுடன் தொடர்புடைய அனைத்து பொருட்பாடுகளுக்கும் தேவையான மாறுதல்களுடன் பொருந்துதல் வேண்டும்.

Verified Real Copy ™

(4) எந்தவொரு நபர், (2) ஆம் உட்பிரிவின்படி பிணை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதோ, அவர் அத்தகைய பிணையை குறிப்பிடப்பட்ட தேதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ வழங்கவில்லையாயின், நிர்வாகத் துறை நடுவர் அல்லது அவருடைய பதவிக்கு தொடந்து வருபவரின் கருத்தில், அவர் பிணை முறியை மீறியதாகவும், கூறப்பட்ட தொகுப்புச் சட்டத்தின் 117 ஆம் பிரிவின் கீழ் செய்து கொடுக்கப்பட்ட பிணைமுறி என்ற வகையில் கூறப்பட்ட தொகுப்புச் சட்டத்தின் 122–ஆம் பிரிவில் வகைசெய்யப்பட்டவாறான முறையில் அத்தகைய நபருக்கு எதிராக தேவையான நடவடிக்கையைத் தொடங்கலாம்.".

52 E பிரிவிற்கான திருத்தம்.

14. முதன்மைச் சட்டத்தின், 52–E பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(1) நபரெவரும்,—

(i) 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (A) கூறு, (B) கூறு அல்லது (C) கூறின்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றமொன்றிற்கு குறைந்தது இருமுறை முந்தைய தண்டணைத் தீர்ப்பு பெற்றிருந்ததால்; அல்லது

(ii) 4 ஆம் பிரிவின் (1–A) உட்பிரிவு, அல்லது 5 ஆம் பிரிவு அல்லது 7 ஆம் பிரிவின்படி

தண்டிக்கப்படக்கூடிய குற்றத்திற்காக முந்தைய தண்டனைத்தீர்ப்பு பெற்றிருந்தால் நீதிமன்ற மானது, அத்தகைய நபருக்கு சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கும் சமயத்தில் தாமாகவோ அல்லது தீர்ப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நன்னடத்தை அலுவலரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரிலோ அல்லது தொடர்புடைய விசாரணை அலுவலரின் ஆணையினாலோ, அந்த நபரை சிறைத்தண்டனைக்கான அத்தகைய தீர்ப்பு முடிவுற்ற பின்பு அவர் சாதாரணமாக வசிக்கின்ற அல்லது தொழில் செய்கின்ற இடத்திலிருந்து, அத்தகைய ஆணையில் நீதிமன்றத்தால் குறித்திடப்படலாகும் வேறு மாவட்டம் எதற்கும் சென்றுவிடும்படி பணிக்கலாம்.".

II ஆம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

15. முதன்மைச் சட்டத்தின், II ஆம் இணைப்புப்பட்டியலில்,—

(1) "(52–A பிரிவைக் காண்க)" எனும் சொற்றொடருக்காக, "(52A மற்றும் 52AA பிரிவுகளைக் காண்க)" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) "4 (1) (a), 4(1)(aa), 4(1)(aaa), 4(1)(b), 4(1)(d), 4(1)(e), 4(1)(f), 4(1)(g), 4(1)(h), 4(1) (i) மற்றும் 4 (1) (jj) பிரிவுகளின் படியான தண்டனை எதுவும்" எனும் சொற்றொடருக்காக, அவை காணப்படுகின்ற இரண்டு இடங்களில், "4 ஆம் பிரிவின் (1) ஆம், உட்பிரிவின் (A) கூறு, (B) கூறு, (C) கூறு, 4 ஆம் பிரிவின் (1–A) உட்பிரிவு, 5ஆம் பிரிவு, 7ஆம் பிரிவின்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றம் எதுவும்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

Verified by RealEstate™

நோக்கக் காரண விளக்கவுரை

1937–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டமானது (தமிழ்நாடு சட்டம் X/1937) கூறப்பட்ட சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளை மீறி, மதுவினை இறக்குமதி, ஏற்றுமதி, போக்குவரத்து, உடைமை, உற்பத்தி, குப்பியில் அடைத்தல் மற்றும் அருந்துதல் போன்ற குற்றங்களுக்கு பல்வேறு தண்டனைகளை வழங்குகிறது. சில கொடிய குற்றங்களுக்கு, குறிப்பாக மனித உயிருக்கு கேடு விளைவிக்கும் கள்ளச்சாராயம் தயாரித்தல், உடைமையில் வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்ற குற்றங்களுக்கு, கூறப்பட்ட சட்டத்தில் வழங்கப்படும் தண்டனைகள் அத்தகைய குற்றங்களை களைவதற்கும் அத்தகைய குற்றங்களில் வழக்கமாக ஈடுபடும் குற்றவாளிகளைத் தடுப்பதற்கும் போதுமானதாக இல்லை என்று கருதப்படுகிறது, என்பதாலும்

2. தமிழ்நாடு மாநிலத்தில் இருந்து கள்ளச்சாராயத்தின் அச்சுறுத்தலை முற்றிலுமாக ஒழிப்பது அவசியமானது என்பதாலும், மேற்சொன்ன நோக்கத்தை அடைவதற்காக, பெரும்பாலும் சட்டவிரோதமான கள்ளச்சாராயத்துடன் கலக்கப்படும் குடி தன்மை இழந்த எரிசாராயம் மற்றும் மெத்தனால் போன்ற தடைசெய்யப்பட்ட மதுபானங்கள் தொடர்பான குற்றங்களுக்காக கூறப்பட்ட சட்டத்தின்படி வழங்கப்படும் தண்டனைகளானது, விலைமதிப்பற்ற மனித உயிர் இழப்பினை விளைவிக்கும் கள்ளச்சாராயங்களை உற்பத்தி செய்தல், உடைமையில் வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல் போன்றவற்றில் வழக்கமாக ஈடுபடும் கள்ளச்சாராயம் விற்பனை செய்வோர் மீது கடுமையான தடுக்கும் விளைவினை கொண்டிருக்கும் வகையில் கணிசமாக அதிகரிக்கப்பட வேண்டும், என்பதாலும்

3. எனவே, தற்போது, கூறப்பட்ட சட்டத்தின் 4, 5, 6, 7 மற்றும் 11 ஆம் பிரிவுகளின் படியான பல்வேறு குற்றங்களைச் செய்ததற்காக வழங்கப்படும் சிறைத் தண்டனையின் காலஅளவு மற்றும் தண்டத்தொகையின் அளவை கணிசமாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. அத்தகைய குற்றங்களில் பயன்படுத்தப்படும் அனைத்து அசையும் சொத்துக்களையும் பறிமுதல் செய்யவும், மது அருந்துவதற்கு பயன்படுத்தப்படும் உரிமம் இல்லாத இடங்களை மூடி முத்திரை யிடவும் முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், மேற்சொன்ன சில கொடூரமான குற்றங்கள் இணக்கமாக தீர்க்கமுடியாததாக இருக்கவேண்டியதாகவும் முன்மொழியப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், மேற்சொன்ன குற்றங்களை வழக்கமாகச் செய்யும் நபர்களை அத்தகைய நபர்கள் எதிர்காலத்தில் இதுபோன்ற குற்றங்களை செய்வதிலிருந்து தடுக்க கணிசமான தொகைக்கு பிணைமுறியினை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்க நிர்வாகத்துறை நடுவருக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், கூறப்பட்டச் சட்டத்தில் 52–AA பிரிவை உட்புகுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது. கூறப்பட்ட சட்டத்தின் கீழ் குறித்தசில குற்றங்களுக்கு தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவரை அந்தப் பகுதியிலிருந்து நீக்கம் செய்வதற்காக, மதுவிலக்கு அதிகாரி அல்லது புலனாய்வு அதிகாரியால் அதிகார வரம்பு கொண்ட நீதிமன்றத்தின் முன் விண்ணப்பம் செய்ய வகை செய்யும் கூறப்பட்ட சட்டத்தின் 52–E பிரிவை திருத்தம் செய்யவும் முன்மொழியப்பட்டுள்ளது.

4. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

சு. முத்துசாமி,
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 ஜூன் 29.

கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.

Verified by TNGovt

Verified RealEstate™

2024–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2024

2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2024–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணைய (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

4ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 17/2021.

2. 2021–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் முதலாம் வரம்புரையில், ''எழுபது ஆண்டுகள்'' எனும் சொற்றொடருக்காக, ''எழுபத்தைந்து ஆண்டுகள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

Verified RealEstate™

நோக்கக் காரண விளக்கவுரை.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் நலனைப் பாதுகாக்கவும், அவர்களின் பொருளாதார மற்றும் சமூக நல்வாழ்வைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும், 2021–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 17/2021) இயற்றப்பட்டது. கூறப்பட்ட சட்டத்தின்கீழ், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் 2021 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. கூறப்பட்ட சட்டத்தின்படி, மேற்சொன்ன ஆணையத்தின் தலைவர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொடர்பான விவகாரங்களில் சிறப்பு அறிவு திறனுடைய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைச் சேர்ந்த, உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவராக இருத்தல் வேண்டும். கூறப்பட்ட சட்டத்தின் வகைமுறைகளை திறம்பட நடைமுறைப்படுத்தவும், அனுபவம் வாய்ந்த மற்றும் மூத்த ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சேவைகளைப் பயன்படுத்தவும், மேற்படி ஆணையத்தின் தலைவர் அவர் எழுபது வயதுக்கு பதிலாக எழுபத்தைந்து வயதை அடையும் தேதி வரையில், மேற்படி பதவியை வகித்தல் அவசியம் என்று கருதப்படுகிறது. எனவே, அரசு, அந்த நோக்கத்திற்காக, மேற்சொன்ன சட்டத்தில் திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

என். கயல்விழி செல்வராஜ்,
ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2024 ஜூன் 29.

கி. சீனிவாசன்,
முதன்மைச் செயலாளர்.

Verified RealEstate

2024–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2024

2024–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு.

1. இந்தச் சட்டம், 2024–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச்(எண். 2) சட்டம் என வழங்கப்பெறும்.

2024–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தல்.

தமிழ்நாடு சட்டம் __ 2024.

